# பிறிலியண்ட் கல்லூரி மட்டக்களப்பு
# Brillient College Batticaloa

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை - 02**

General Certificate of Education (Adv. Level) Exam - 02

**உயிர்முறைமைகள் தொழினுட்பம்**
Biosystems Technology

| 66 | T | I |
|---|---|---|

**ஒரு மணித்தியாலம்**
One Hours

**[2020 க.பொ.த உயர் தர பரீட்சைக்கு தோற்றுவோருக்கானது]**


**தொகுப்பு : திரு. பி.எவ்.ரதீந்திரகுமார், மட் / மகாஜன கல்லூரி**

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய யூன் 2015 தரம் 13 (2015) வினாத்தாளிலிருந்து தொகுக்கப்பட்டது

01. நிலநீர் மீள் நிரம்பலில் பங்கு கொள்ளும் மண்ணீர் வகை
 1) பருகு நீர் 2) மயிர்த்துளை நீர் 3) புவியீர்ப்பு நீர் 4) தாவரம் பயன்படுத்தும் நீர்
 5) தாவரம் பயன்படுத்தாத நீர்

02. நுண் இனப்பெருக்கத்தின் போது வளர்ப்பூடகத்தில் ஏகார் பயன்படுத்தப்படுவது,
 1) நுண்ணங்கித் தொற்றை தவிர்ப்பதற்கு 2) வேர் கொள்ளலை தூண்டுவதற்கு
 3) அங்குர வளர்ச்சியை தூண்டுவதற்கு 4) குறை திண்ம ஊடகத்தை உருவாக்குவதற்கு
 5) போசனையை வழங்குவதற்கு

03.




படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணம்
 1) அலிடேற்று
 2) பார்வை மூலைமட்டம்
 3) அரியத்திசைகாட்டி
 4) கவைத்தூக்குக்குண்டு
 5) குறுமட்டமானி

04. முசல் வகைப் பம்பியுடன் ஒப்பிடும் போது மைநீக்கப் பம்பி
 1) நீர் வெளியேற்றப்படும் அளவு சீரானது 2) நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியது
 3) பராமரிப்பு செலவு அதிகம் 4) ஆரம்பச் செலவு அதிகம் 5) கழிவுப்பொருள் கொண்ட நீரைப் பம்பமுடியும்

05. களஞ்சியத்தில் ஏற்படும் விளைச்சல் இழப்புக்களை குறைப்பதற்கு,
 1) களஞ்சியத்தில் அதிக வெப்பநிலையைப் பேண வேண்டும்
 2) களஞ்சியத்தில் காற்றோட்டத்தை மட்டுப்படுத்த வேண்டும்
 3) பழங்களை அதிக ஈரப்பதனிலும் குறைந்த வெப்பநிலையிலும் பேண வேண்டும்
 4) தானியங்களை களஞ்சியப்படுத்தும் போது உலர்த்துதல் கூடாது
 5) விளைச்சல்களை நிலத்தில் குவித்து வைத்தல் வேண்டும்

06. குறித்த பிரதேசத்தில் குறிப்பிட்ட தினம் ஒன்றில் 12cm விட்டம் கொண்ட எளிய மழைமானி மூலம் சேகரிக்கப்பட்ட மழைநீரின் கனவளவு $220cm^3$ எனின் அன்றைய தின மழைவீழ்ச்சியின் அளவை நியம அலகில் சரியாக குறிப்பிடுவது
 1) 4.8cm 2) 2.4cm 3) 1.94cm 4) 25mm 5) 19.4mm

07. பயிர்ச்செய்கையில் ஒளி தொடர்பான கீழ்வரும் கூற்றுக்களில் தவறானது எது.
 1) சலாது, கரட் போன்றன நீண்ட பகற் காலத்தில் பூக்களை தோற்றுவிக்கும்
 2) நீலநிற ஒளி வித்து முளைத்தலிற்கு மிக அவசியமானது
 3) எள்ளு, கோப்பி போன்ற தாவரங்கள் குறைந்த பகற் காலத்தில் பூக்களை தோற்றுவிக்கும்
 4) நீல நிற ஒளி தாவரங்களின் ஒளித்தொகுப்பை அதிகரிக்கும்
 5) சிவப்பு நிற ஒளி தாவரங்கள் கிளைத்தல், ஒளித்தொகுப்பிற்கு அவசியம்

08. ஆளுகையில்லங்களில் மகரந்தச் செயற்கையின் பின் பூக்களை மூடிக் கட்டுவதற்கான காரணம்

1) பிற மகரந்த மணிகள் குறியை அடைவதை தடுப்பதற்கு
2) பூக்கள் உதிர்வதை தடுப்பதற்கு
3) பூக்களின் கேசரங்களை அகற்றுவதற்கு
4) தற்கருக்கட்டலை தூண்டுவதற்கு
5) வித்து உருவாக்கத்தை தடுப்பதற்கு

09. மண்ணின் அடர்த்தி தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.


A – மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகம் எனில் மண் இறுக்கமடைந்துள்ளது
B – மண்ணின் தோற்ற அடர்த்தி அதிகம் எனில் மண் நீர் கொள்ளளவு உயர்வு
C – குறித்த ஓர் இடத்தில் மண்ணின் தோற்ற அடர்த்தி மாறுபடாது எனினும் உண்மை அடர்த்தி மாறுபடும்
D – வெவ்வேறு பிரதேசங்களில் மண்ணின் உண்மை அடர்த்தி வேறுபடும் எனினும் வேறுபடும் வீச்சு 2.3 – 2.8 ஆக காணப்படும்.

தரப்பட்ட கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1) A,B மட்டும்
2) A, C, D மட்டும்
3) B, D மட்டும்
4) A, D மட்டும்
5) B, C, D மட்டும்

10. தரப்பட்டுள்ள முக்கோணியின் பரப்பளவைச் சரியாகக் குறிப்பிடுவது

1) $\frac{1}{2} \times AC \times AO$
2) $\frac{AC \times BC}{2} \times Sin\,C$
3) $\frac{1}{2} \times AB \times BC$
4) $\frac{AC \times BC}{2} \times Sin\,B$
5) $\frac{AB+BC+AC}{2}$




11. நான்கு சக்கர திராக்ரறில் முப்புள்ளி இணைப்பை இயக்குவது

1) நீரியல் தொகுதி
2) உராய்வு நீக்கி
3) வலு ஊடுகடத்தும் தொகுதி
4) எரிபொருட் தொகுதி
5) கியர்பெட்டி

12. நிலையான பால் கறத்தற் பொறியின் பகுதிகள், தொழில்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியானது எது.

1) முலைக்காம்பு கிண்ணம் – உறுஞ்சல் விசையை ஏற்படுத்தல்
2) வெற்றிடக் குழாய்த்தொகுதி – வெளியேறும் பாலை சேகரித்தல்
3) Pulsater –முலைக்காம்பிற்கு சந்தத்திற்குரிய சுருங்கலையும் தளர்வையும் ஏற்படுத்தல்
4) Teat cup – உறிஞ்சப்படும் பாலைச் சேகரித்தல்
5) வெற்றிடமானி – கிருமியழித்தலை மேற்கொள்ளல்

13. கனகூள மனை ஒன்றை அமைக்கும் போது ஒரு கோழிக்கு ஒதுக்கப்பட வேண்டிய இடவசதி அண்ணளவாக

1) $0.05m^2$
2) $0.12m^2$
3) $0.25m^2$
4) $0.30m^2$
5) $0.05m^2$

14. பாலிலுள்ள கொழுப்பு சதவீதத்தை துணிவதன் மூலம் பாலுடன் எப்பொருள் கலப்படம் செய்யப்பட்டுள்ளதை அறிய முடியும்?

1) யூரியா
2) தேங்காய் பால்
3) சுக்குரோஸ்
4) நீர்
5) பால்மா

15. பிளான்சிங் தொடர்பான சரியான கூற்று கீழ்வருவனவற்றில் எது.

1) $68^oC$ வெப்பநிலையிலுள்ள நீரில் 10 நிமிடங்கள் உணவுப் பொருட்களை இடல்
2) நுண்ணலை அடுப்பில் 30 நிமிட நேரம் உணவை இடல்
3) உணவினுள் காணப்படும் நுண்ணங்கிகள் முழுமையாக அழிக்கப்படும்
4) உணவிற்கு ஒரு நிமிட நேரம் கொதிநீராவி பட விடல்
5) உணவிலுள்ள இயற்கை நொதியங்கள் உயிர்ப்பூட்டப்படும்

16. இலங்கையில் அதிகளவில் வளர் க்கப்படும் அதிக சந்தைக் கேள்வியைக் கொண்ட அலங்கார நீர்த் தாவரங்களை மட்டும் கொண்ட தொகுதி எது.

1) Cabomba, Vallisneria, Aponogenton
2) Bacopa, Pistia, Lymnophilla
3) Cabomba, Hydrilla, Pistia
4) Vallisneria, Lotus, Aponogenton
5) Lymnophilla, Bacopa,Molluses

17. முட்டையிடும் அலங்கார மீன் வகைகளில், Gold fish

1) முட்டைகளைப் பரப்பும் வகையிலாகும்
2) முட்டைகளை இடப்படுத்தும் வகையிலாகும்
3) முட்டைகளை புதைக்கும் வகையிலாகும்
4) முட்டைகளை வாயில் வைத்து பேணும் வகையிலாகும்
5) கூடுகளை அமைக்கம் வகையிலாகும்

18. புவி மேற்பரப்பு நில அளவை (Geodetic Surveying) எனப்படுவது

1) புவி தட்டை வடிவானது எனக்கொண்டு அளத்தல்
2) புவி கோளவடிவானது எனக் கொண்டு அளத்தல்
3) புவியின் குறித்த புள்ளியின் நிலைக்குத்து தூரத்தை அளத்தல்
4) சிறிய நிலப்பரப்பின் பரப்பளவை துணிதல்
5) புவியின் மையத்தினூடாக வரையப்படும் செங்குத்து கோடு

19. உணவுப் பொருட்கள் மாசடைவதற்கு ஏதுவான காரணங்களை இனங்கண்டு அவ் அபாயங்களை இயன்றளவு குறைப்பதற்கு அல்லது நீக்குவதற்கு ஆவன செய்யும் விசேட முகாமைத்துவ முறை

1) GAP 2) HACCP 3) GMP 4) GHP 5) ISO 22000

20. அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை குறைப்பது தொடர்பாக சரியான கூற்று எது.

1) எல்லை உச்ச நிலையற்ற தொகுதிக்குரிய பழங்கள் மரத்தில் பழுத்த பின்னர் அறுவடை செய்யப்பட வேண்டும்
2) வாழைக் குழையை அறுவடை செய்ய உகந்த நேரம் மு. ப. 10.00 மணியிலிருந்து பி. ப. 3.00 மணி வரை
3) மாம்பழம் அறுவடை செய்ய உகந்த நேரம் மு. ப. 10.00 மணிக்கு முன்னராகும்
4) அறுவடை செய்யத விளைச்சல்களை நிலத்தில் குவித்து வைப்பதனால் இழப்பு ஏற்படும் சந்தர்ப்பம் குறையும்
5) கொடித்தோடை, போஞ்சி போன்ற மறக்கறிகளை ஒன்றாக களஞ்சியப்படுத்துவதால் இழப்பை குறைக்க முடியும்

21. பாதுகாக்கப்பட்ட மனையினுள் பயிர்வளர்ப்பின் போது மேற்கொள்ளப்படும் விசேட பராமரிப்பு நடவடிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

A – கந்தக வாயுவை செலுத்துதல்
B – காய்கள், பூக்களை ஐதாக்கல்
C – கொடி வகைத் தாவரங்களை பயிற்றுவித்தல்
D – மனைக்கு மறைப்பிட்டு மனையின் வெப்பநிலையை $60^oC$ வரை அதிகரித்தல்

மேற்படி கூற்றுக்களில் பீடைகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படுவது,

1) A மட்டும் 2) B மட்டும் 3) B, C மட்டும் 4) A, D மட்டும் 5) B, C, D மட்டும்

22. உணவுப் பொருட்கள் – பயன்படுத்தப்படும் பொதியிடல் பதாரத்தம் தொடர்பாக தவறான கூற்று எது.

1) நெல் – சாக்கு
2) பால்மா – பொலித்தீன்
3) இறைச்சி – அலுமினியத் தாள்
4) பழங்கள் – தகரப்பேணி
5) மீன் – தகரப்பேணி

23. திண்ம ஊடகப் பயிர்செய்கையில் பயிர்ச்செய்கை உறையின் உட்புறம் கறுப்பு நிறமாக இருக்கக் காரணம்

1) வெப்பத்தை அகத்துறிஞ்சுவதற்கு
2) பங்கசுக்களின் வளர்ச்சியை தடுப்பதற்கு
3) ஓமோன் உருவாக்கத்தை அதிகரிப்பதற்கு
4) தாவர வளர்ச்சியை மட்டுப்படுத்துவதற்கு
5) நீர் அகத்துறிஞ்சலை அதிகரிப்பதற்கு

24. உணவு உற்பத்தி ஒன்றை பொதியிடுவது தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – களஞ்சியப்படுத்தப்பட்ட பொதியினுள் நுண் சூழல் எப்போதும் மாறாமல் பேண வேண்டும்
B – பொதியிடு பதார்த்தம் உணவின் ஈரப்பதனில் மாற்றத்தை ஏற்படுத்தல் அவசியம்

மேற்படி கூற்றுக்கள் தொடர்பாக சரியானது

1) கூற்று A சரி கூற்று B தவறு
2) கூற்று B சரி கூற்று A தவறு
3) கூற்று A சரி கூற்று B யின் மூலம் அது சரியாக விளக்கப்படும்
4) கூற்று B சரி கூற்று A யின் மூலம் அது சரியாக விளக்கப்படும்
5) கூற்று A சரி கூற்று B தவறானவை

25. உயிரியல் பரமாணங்களின் கீழ் நீர் மாதிரியை சோதனைக்குட்படுத்தும் போது நியமிப்புச் சோதனையின் முடிவு நேரானதாக இருப்பின் பெற்றுக் கொள்ளக்கூடிய தகவல்,

1) நீர் மாதிரியில் கோலிபோர்ம் பற்றிரியாக்கள் இருக்கலாம்
2) நீர் மாதிரியில் கோலிபோர்ம் தவிர்ந்த ஏனைய பற்றிரியாக்கள் இருக்கலாம்
3) நீர் மாதிரியில் கோலிபோர்ம் பற்றீரியாக்கள் இல்லை
4) நீர் மாதிரியில் கோலிபோர்ம் அல்லது வேறுவகை பற்றீரியா இருக்கலாம்
5) நீர் மாதிரியில் கோலிபோர்ம் பற்றீரியாவோ அல்லது வேறுவகை பற்றிரியாவோ இல்லை